# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நெய்வேலி.

## STC.No. 401 / 2025

**PW-1**

2026-ம் ஆண்டு ஜீலை மாதம் 30-ம் நாள் வியாழன் கிழமை புகார்தாரர் தரப்பு 1-வது சாட்சியின் சாட்சியம்.

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 30.07.2026 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் R.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல்., அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ராஜசேகர் | **தொழில்** | ஒப்பந்த தொழிலாளர் |
| **தந்தை பெயர்** | ராமானுஜம் | **வசிப்பிடம்** | ஆதண்டார்கொல்லை |
| **வயது** | 38 | **தாலுக்கா** | |

**குறுக்கு விசாரணை:**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ EEE படித்துள்ளேன். ஆஜர் எதிரி எனக்கு துாரத்து சொந்தம் ஆகும். எனது பாட்டியும், எதிரியின் தாயாரும் உறவினர்கள் ஆவார்கள். நான் புகார் மனுவில் எதிரி எனக்கு பழக்கம் என்றுதான் குறிப்பிட்டுள்ளேள் என்றாலும், அவர் எனது உறவினர் என்று குறிப்பிடவில்லை என்றாலும் தற்போது எனக்கு தெரியவில்லை. அந்த புகார் மனுவை நான் கூறாமல் எனது வழக்கறிஞர்தான் தயார் செய்தாரா என்றால் நான் கூறித்தான் தயார் செய்தார். எதிரியின் தந்தை பெயர் என்ன என்றால் வீரண் ஆகும். அவருடைய விலாசம் எனக்கு தெரியும், தெற்கு தெரு, மானடிகுப்பம் ஆகும். நான் எதிரியின் வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். எப்போது சென்றேன் என்றால் இந்த வழக்கின் காசோலை திருப்பப்பட்ட பின்பு நேரில் சென்று கேட்பதற்காக எதிரியின் வீட்டிற்கு சென்றேன். எப்போது சென்றேன் என்றால் 2025 ம் வருடம் பிப்ரவரி மாதம் சென்றேன். அதற்கு முன்பு நான் எதிரியின் வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன்.

2) நான் எதிரியின் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் என்எல்சியில் நிரந்தர

பணியாளரா என்றால் நான் ஒப்பந்த தொழிலாளராக வேலை செய்கிறேன். நான் ரைஸ் மில் வைத்துள்ளேன் மற்றும் விவசாயமும் செய்து வருகிறேன். எனது வருமானத்திற்கு ஏற்றவாறு வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் 2022 ம் ஆண்டிலிருந்து எனது வருமானத்தை வருமான வரி துறைக்கு காண்பித்து வருகிறேன்.

3) எதிரி எப்போது என்னிடம் பணம் கேட்டார் என்றாலும், நான் எப்போது அவருக்கு பணம் கொடுத்தேன் என்றாலும் ஜனவரி 2023 ல் பணம் கேட்டார், நான் 20.01.2023 அன்று எதிரிக்கு பணம் கொடுத்தேன். பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்துவிட்டு எதிரி என்னிடம் பணம் வாங்கி சென்றார். எதிரி என்னிடம் பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்துதான் பணம் வாங்கி சென்றார் என்றால் எதிரி என்னிடம் பணம் வாங்கிக்கொண்டு எதிரி பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தார். 20.01.2023 அன்று பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தார். பிராமிசரி நோட்டில் எவ்வளவு தொகை எழுதிக்கொடுத்தார் என்றால் ரூ.4 லட்சத்துக்கு எழுதிக்கொடுத்தார்.

4) 20.01.2023 அன்று என்ன கிழமை என்று எனக்கு தெரியுமா என்றால் கிழமை என்று எனக்கு ஞாபகமில்லை, காலையில் வந்து பணம் வாங்கி சென்றார். எத்தனை மணிக்கு பணம் வாங்கி சென்றார் என்றால் நேரம் சரியாக எனக்கு சொல்ல தெரியவில்லை. புரோ நோட்டை எங்கு வைத்து எழுதினேன் என்றால் எதிரியும், அவரது தம்பியும் வந்திருந்தார்கள், எதிரியேதான் எழுதிக்கொடுத்தார். புரோ நோட்டில் உள்ள வாசகங்கள் அனைத்தையும் எதிரியே எழுதினாரா என்றால் ஆமாம். புரோ நோட்டில் சாட்சிகளாக யார் கையொப்பம் செய்தது என்றால் எதிரியின் தம்பிதான் கையொப்பம் செய்தார். எதிரியின் தம்பி பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது, எதிரியின் தம்பி என்ன படித்துள்ளார் மற்றும் என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

5) புரோ நோட்டை யார் வாங்கி வந்தது என்றால் வேல்முருகன்தான் வாங்கி வந்தார். பணம் கொடுக்கப்பட்ட தேதியில் மேற்படி புரோ நோட்டு எங்கு வைத்து எழுதினார் என்றால் அன்றைய தினம் எதிரி எங்கள் ஊருக்கு வந்தார். எனது வீட்டில் வைத்து எழுதியதாகத்தான் எனக்கு ஞாபகமுள்ளது. புரோ நோட்டில் எத்தனை ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டி கையொப்பம் செய்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் இரண்டு ஸ்டாம்ப்புகள் இருந்ததாக ஞாபகம் உள்ளது. புரோ நோட்டில் கண்ட தொகைக்கு வட்டி எவ்வளவு எழுதப்பட்டுள்ளது என்றால் ரூ.100 க்கு ஒரு ரூபாய் வட்டி வீதம் என்று எழுதப்பட்டிருந்தது. நான் எத்தனை வட்டிக்கு எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் 100 க்கு ஒரு ரூபாய் வட்டிக்குதான் கொடுத்தேன். புரோ நோட்டை தொகையை பெற்றுக்கொண்ட பின்பு கொடுத்தாரா அல்லது அதை பெற்றுக்கொண்ட பின்னர் நான் பணம் கொடுத்தேனா என்றால் இரண்டும் ஒரே நேரத்தில்தான் நடந்தது, பணத்தை

பெற்றுக்கொண்ட பின்பு புரோ நோட்டு கொடுத்தார். புரோ நோட்டு எழுதி முடிக்கப்பட்ட நேரம் என்ன என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை, பகல் நேரம்தான்.

6) எதிரிக்கு நான் பணம் கொடுத்தபோது யாரெல்லாம் உடன் இருந்தது என்றால் நானும், எனது மனைவியும் இருந்தோம், எதிரியும் அவரது தம்பியும் இருந்தார்கள். எனது மனைவியின் பெயர் குணவதி ஆகும். நான் கொடுத்த தொகை எந்த ரூபாய் நோட்டுகள் என்றால் 500 ரூபாய் நோட்டுகள் ஆகும். அந்த தொகை எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எனது ரைஸ் மில் மூலமும் வந்தது, மேலும் எனது சேமிப்பு தொகையும் இருந்தது.

7) புரோ நோட்டு சாட்சியை நீதிமன்றத்தில் அழைத்து சாட்சியாக விசாரிப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆட்சேபனை உள்ளது, நான் காசோலைக்காகத்தான் வழக்கு தாக்கல் செய்தேன். புரோ நோட்டு தொகைக்கு எதிரி வட்டி ஏதேனும் கொடுத்திருக்கிறாரா என்றால் இல்லை. நான் எதிரியின் வீட்டிற்கு வட்டி தொகை கேட்பதற்காக சென்றுள்ளேனா என்றால் அசல் தொகையை கேட்பதற்காகவே சென்றுள்ளேன். எந்த தேதியில் நான் அவ்வாறு சென்றேன் என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை, இரண்டு, மூன்று முறை சென்றுள்ளேன். அந்த சமயத்தில் எதிரியின் வீட்டில் யார், யார் இருந்தார்கள் என்றால் எதிரியின் அப்பாவும், தம்பியும் இருந்தார்கள். நான் எதிரிக்கு பணம் கொடுத்துள்ளேன். அதை அவர் திரும்ப செலுத்தவில்லை என்று எதிரியின் அப்பாவிடம் சொல்லிவிட்டு வந்தேன்.

8) அதன்பிறகு நான் எதிரியின் மீது என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் நான் புரோ நோட்டு மூலமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, நான் எதிரியிடம் வற்புறுத்தி கேட்டதால் அவர் என்னிடம் இருந்த புரோ நோட்டை வாங்கிக்கொண்டு எனக்கு காசோலை கொடுத்தார். அது எந்த வகையான காசோலை என்றால் கரூர் வைசியா வங்கியின் காசோலை என்றுதான் எனக்கு தெரியும், அது எந்த வகையான காசோலை என்று எனக்கு தெரியாது. நான் காசோலையை எதிரியின் வீட்டிற்கு சென்று வாங்கினேனா என்றால் பகல் ஒரு மணியளவில் எதிரி என் வீட்டிற்கு வந்து கொடுத்துவிட்டு சென்றார். எந்த தேதியில் கொடுத்தார் என்றால் 20.01.2025 அன்று கொடுத்தார். அது என்ன கிழமை என்று எனக்கு தெரியுமா என்றால் தற்போது எனக்கு தெரியவில்லை.

9) காசோலை எந்த கிளையை சேர்ந்த காசோலை என்றால் கரூர் வைசியா வங்கி, பண்ருட்டி கிளையை சேர்ந்தது. காசோலையில் எந்த தேதியிட்டு கொடுத்தார் என்றால் 20.01.2025 தேதியிட்டு கொடுத்தார், எவ்வளவு தொகைக்கு காசோலையை கொடுத்தார் என்றால் ரூ.496000/-க்கு கொடுத்தார். புரோ நோட்டிற்காக பெற்ற தொகைக்குதான் காசோலையை கொடுத்தாரா என்றால்

என்னிடம் வாங்கிய தொகைக்கு வட்டியுடன் சேர்த்து கொடுத்தார். 20.01.2025 அன்று நான் எதிரிக்கு எந்த தொகையையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான், அதற்கு முன்பு வாங்கிய தொகைக்குதான் எதிரி என்னிடம் காசோலையை கொடுத்தார். எதிரி என்னிடம் காசோலையை கொடுத்தபோது யார், யார் இருந்தது என்றால் நானும், எதிரியும் மட்டும்தான் இருந்தோம். எந்த விகிதத்தில் ரூ.496000/- க்கு காசோலை எதிரி கொடுத்தார் என்றால் ரூ.100 க்கு ஒரு ரூபாய் வட்டி வீதம் கணக்கிட்டு எதிரியேதான் அந்த தொகைக்கு எனக்கு காசோலை கொடுத்தார். எதிரியே கணக்கு போட்டார். 20.01.2023 லிருந்து 20.01.2025 வரை வட்டி கணக்கிட்டு எதிரி அந்த காசோலையை கொடுத்தார், வட்டி மட்டும் ரூ.96000/- ஆகும்.

10) நான் எதிரிக்கு பணம் கொடுத்த தேதி 20.01.2023 என்றும் அவர் எனக்கு காசோலை கொடுத்த தேதி 20.01.2025 என்றும் ஒரே தேதியை ஜோடனை செய்து இந்த வழக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்தையும், எதிரியையும் ஏமாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, கெங்கைக்கொண்டான் கிளையில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளேன். எனது சேமிப்பு கணக்கு எண் எனக்கு தெரியுமா என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. எதிரியின் வங்கி கணக்கின் எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காசோலை எண் என்ன என்றால் **000112** ஆகும்.

11) தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் இவ்வழக்கு காசோலையான பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியுடையதா என்றால் அது எனக்கு தெரியாது, எதிரிதான் எழுதிவந்து என்னிடம் வந்து கொடுத்தார். எதிரி எங்கிருந்து எழுதி வந்தார் என்றால் அவர் எங்கு வைத்து எழுதி எடுத்துவந்தார் என்று எனக்கு தெரியாது. 20.01.2025 அன்று புரோ நோட்டு வட்டி கணக்கை எனது வீட்டில்வைத்துதான் பார்த்தேன் என்றால் அந்த கணக்கை நான் பார்க்கவில்லை, எதிரிதான் கணக்கு பார்த்து காசோலை எடுத்து வந்தார். என்னிடம் காசோலை கொடுத்தபோது ஏற்கனவே எதிரி காசோலையை நிரப்பிவிட்டு வந்துதான் என்னிடம் கொடுத்தார்.

12) என்னுடைய வற்புறுத்தலின்பேரில்தான் எதிரி எனக்கு காசோலை கொடுத்தாரா என்றால் அப்படியில்லை. நான் எனக்கு பணம் வேண்டும் என்று கேட்டேன், அதற்கு எதிரி காசோலை கொடுத்தார். காசோலையை வசூலுக்காக எப்போது தாக்கல் செய்தேன் என்றால் 13.02.2025 அன்று தாக்கல் செய்தேன். 20.01.2025 அன்று கொடுத்த காசோலையை ஏன் 22 நாட்கள் காலதாமதத்திற்கு பின்பு 13.02.2025 அன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எதிரி அவரது வங்கி கணக்கில் பணம் செலுத்தியபின்பு என்னை காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யுமாறு கூறியிருந்தார்.

13) காசோலை எந்த காரணத்திற்காக வங்கியால் திருப்பப்பட்டது என்றால் Refer to Drawer என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டது. அதன்பிறகு எனது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்தேன். காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரியை தொடர்புகொண்டு காசோலை தொகை பற்றி கேட்டேனா என்றால் நான் அவரை பார்ப்பதற்காக அவரது வீட்டிற்கு சென்றிருந்தேன், ஆனால் அவரை என்னால் பார்க்க முடியவில்லை, எனது அலைபேசி அழைப்பையும் அவர் எடுக்கவில்லை, அவரது அப்பாவிடம் மட்டும் கேட்டுவிட்டு வந்துவிட்டேன். எப்போது எதிரியின் வீட்டிற்கு சென்றேன் என்றால் பிப்ரவரி 2025 ல் சென்றேன், தேதி ஞாபகமில்லை.

14) நான் எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் 24.02.2025 அன்று கொடுத்தேன். எதிரி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டாரா என்றால் 27.02.2025 அன்று பெற்றுக்கொண்டார். அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்பு 30.02.2025 அன்று எதிரியும், அவரது தந்தை மற்றும் தம்பியும் எனது வீட்டிற்கு வந்து நான்தான் ஏற்கனவே உங்களிடம் வாங்கிய பணத்தை திரும்ப கொடுத்துவிட்டேனே, எதற்காக எனக்கு அறிவிப்பு அனுப்பினீர்கள் என்று எதிரி என்னிடம் முறையிட்டார் என்றால் நான் அறிவிப்பு அனுப்பியதற்கு பின்பு எதிரியை நான் பார்க்கவேயில்லை, அவரது குடும்பத்தாரையும் பார்க்கவில்லை, அவர்கள் எங்கள் வீட்டிற்கும் வரவில்லை.

15) எங்கள் ஊரை சேர்ந்த கலையரசன் என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் தாங்கள் யாரை குறிப்பிடுகிறீர்கள் என்று எனக்கு தெரியவில்லை. நான் எந்த ஊரில் திருமணம் செய்துள்ளேன் என்றால் நான் தெற்கிருப்பில் பெண் கட்டியுள்ளேன். நான் கலையரசன் என்பவரின் தங்கையைத்தான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும், எதிரியும் எவ்வளவு காலமாக என்எல்சியில் ஒப்பந்த தொழிலாளர்களாக ஒரே இடத்தில் வேலை செய்கிறோம் என்றால் நாங்கள் ஒரே இடத்தில் வேலை செய்யவில்லை, நான் மைன்ஸ் – I லும் எதிரி மைன்ஸ் – II லும் வேலை செய்கிறார். எதிரி என்னிடம் 20.01.2023 அன்று என்னிடம் ரூ.40000/– பணம் வாங்கிக்கொண்டு புரோ நோட்டு எழுதிக்கொடுத்தார் என்றாலும், அப்போது எனக்கு பூர்த்தி செய்யப்படாத காசோலையையும் வழங்கியிருந்தார் என்றாலும் சரியல்ல. அந்த தேதியில் எதிரி என்னிடம் ரூ.4 லட்சம் வாங்கியிருந்தார். எதிரி என்னிடம் வாங்கிய ரூ.40 ஆயிரத்தை பைசல் செய்துவிட்ட பின்னர் எனக்கும், எதிரியின் குடும்பத்திற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் நான் எதிரி எனக்கு பொறுப்பிற்காக வழங்கியிருந்த காசோலையை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

16) மேற்படி கருத்து வேறுபாட்டினால்தான் எதிரியின் காசோலையை தவறாக பயன்பத்தி பொய் சங்கதிகளை குறிப்பிட்டு இந்த வழக்கை எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையாகவே எதிரிக்கு

நான் பணம் கொடுத்திருந்தால் அவர் என் கண் முன்னே வழக்கு காசோலையை எழுதிக்கொடுத்திருப்பார் என்றாலும், நான் பணம் கொடுக்காததால்தான் காசோலையை எதிரியே எழுதி வந்து கொடுத்தார் என்று கூறியுள்ளேன் என்றாலும் சரியல்ல.